**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 30.09.2019 ((முற்பகல்)**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 9008/E/2018**

திரு வெ.நாகராஜ் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 06.09.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 05.10.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 23.11.2018 |

******

**ஆணை**

இன்று (30.09.2019) முற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு வெ.நாகராஜ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு கி.கருணாகரன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 06.09.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 23.11.1994-ல் வழங்கிய தீர்ப்புரையில் 54/93 4 பக்கத்தில் 44-வது வரியில் 4.37.5 ச.அடி என்று சொல்லப்பட்டதை ஆதாரத்துடன் முழுமையான ஆவணம், பட்டா எண்.672-ல் கூட்டுப்பட்டா எதன் மூலம் வழங்கப்பட்டது, முழுமையான கோப்பு நகல், பட்டா எண்.140-18 பட்டா எண்.41 எவ்வாறு, எதனடிப்படையில் 1208 என மாற்றம் செய்யப்பட்டது, தொடர்புடைய முழுமையான கோப்பு நகல், OS..185/90 - 23.01.1992 தீர்ப்புரையில் வாதியின் அப்பா பெயரில் பட்டா இல்லையென்று தெளிவாகத் தீர்ப்பு உள்ளபோது செட்டில்மென்ட் காலத்தில் பட்டா எவ்வாறு ஏற்பட்டது, அது குறித்த ஆவண நகல், மேற்படி தீர்ப்புரையில் வாதிக்குப் பாத்தியம் என்பதற்கு எந்தவொரு ஆவணமும் இல்லையென்று தீர்ப்பு உள்ளபோதே மறுபடியும் மகனுக்குப் பாத்தியம் எவ்வாறு ஏற்பட்டது, W.P. 4656/2018 08.03.2018-ல் கூட்டுப்பட்டாவை ரத்து செய்யாமல் இருப்பதற்கு உள் நோக்கம் என்ன, 2013 முதல் கொடுத்த கோரிக்கை மனுவிற்கு எடுத்த நடவடிக்கை என்ன, O.S.109/2016-ல் வழக்கு நிலுவையில் உள்ளதென்று எதனடிப்படையில் கூறுகிறார், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அ3 - யின் பெயர் மற்றும் முகவரி, இதற்கு முன் எங்கு பணி செய்தார், மானாமதுரை வட்டாட்சியர் ந.க.அ.10/6129/2017, நாள் 01.02.2018 முழுமையான அறிக்கை நகல், ப.மு.அ3/3854/2017-ல் கிராம நிர்வாக அலுவலர் அளித்த வாக்குமூலம், சர்வே எண்கள்.140-13-14 எதனடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது என 13 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சிவகங்கை என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 05.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவானது 15.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலர், கோட்டாட்சியர், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவல் கிடைக்க உதவுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 23.11.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு ஏற்கெனவே 05.10.2018 மற்றும் 26.11.2018 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் இன்றைய தேதியில் முழுமையான தகவல் நேரில் சார்வு செய்யத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்து,

விசாரணையின்போது மேல்முறையீட்டாளருக்கு மேற்படி தகவலை நேரில் சார்வு செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதென்பது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளருக்குப் பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பதை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 9008/E/2018</u>**
பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை.

**<u>மனுதாரர்</u>**

திரு வெ.நாகராஜ்,
த/பெ. செ.வெள்ளைச்சாமி,
5/3, தேவேந்திரர் நகர்,
இராஜகம்பீரம் கிராமம் குரூப் (ம) அஞ்சல்,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம் - 630 609.

Copy to: Judgement File.
04/10/19